பதற்கு நீண்ட நாட்களாக முயற்சி செய்தும் முனிசிபாலிட்டியினாலும் முடியவில்லை, அரசாங்கத்தினாலும் முடியவில்லை. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 30 இலட்சம் டன் மேற்படி பகாஸ் உற்பத்தி ஆகிறது. அதிலே சுமார் 7 இலட்சம் டன்தான் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கும் மற்றும் சேஷசாயி பேப்பர் போர்டு போன்ற நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. சுமார் 48 அல்லது 49 ஆயிரம் டன் இதர மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மீதம் உள்ளவை எல்லாம் நம்முடைய சர்க்கரை ஆலைகளில் நீராவி உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகிறது. அது இப்போது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அதுதான் அவர்கள் சொல்கின்ற அந்த ஆலையிலும் இருக்கின்ற சங்கடம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் காகிதம் உற்பத்தி செய்தால், அதனால் கலப்படத்தினால் சங்கடம் ஏற்படும் என்று முதல்வர் அவர்கள் பதில் சொன்னார்கள். புகளூர் பக்கத்தில் சர்க்கரை ஆலையும் காகித ஆலையும் அதற்குப் பக்கத்தில் வேறு ஒரு சர்க்கரை ஆலையும் இருக்கிறது. இதற்கு எந்த ரீதியில் அனுமதி கொடுத்தார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது எல்லா வகையிலும் மதுராந்தகத்திலே உருவாகின்ற சர்க்கரை ஆலையை விட மிகப் பெரிய சர்க்கரை ஆலை என்கின்ற காரணத்தால் அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

தலைமைச் செயலகத்தில் இடப்பற்றாக்குறை.

*3529 திரு. ப. காளியப்பன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— :

தலைமைச் செயலகக் கட்டிடத்தின் உள் நடைபாதையில் சிறுசிறு அறைகளாக தடுக்கப்பட்டு வருவது ஏன்? இடப்பற்றாக்குறைக்கு மாற்றுத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1990 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தலைமைச் செயலக பழைய மற்றும் புதிய கட்டிடத்தில் உள்ள நடைபாதையில் சிறுசிறு அறைகளாக தடுக்கப்பட்டிருந்த தடுப்புகள் தற்பொழுது அகற்றப்பட்டுவிட்டன. மாற்றுத் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றச் செயலக அலுவலகத்தில்கூட இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய சட்டமன்றத்திற்கே புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்குப் பல கோடி ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அந்த வரைபடத்திற்கே சிறப்பான வரை படம் என்று சொல்லி, ஒரு இலட்சம் ரூபாய் பரிசும் கொடுக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் அந்த மதிப்பீடு என்ன ஆயிற்று, எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வரை படம் இலட்சத்துக்குள்ளேயே அடங்கி விட்டது. வரை படத்தை உருவாக்குவது என்றால் கோடிக் கணக்கில் பணம் தேவை; நிதி ஆதாரம் இடம் தரவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் உள்ள இட நெருக்கடியைப்போலவே பொதுவாக மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட காரணத்தால் இன்றைய தேவையைக் கணக்கிடும்போது அங்கு சிறு சிறு அறைகளில் பைல்களைக் குவித்து வைத்து இருக்கிறார்கள். அங்கு அரசு அதிகாரிகள் உட்கார்ந்து இருப்பது கூட, நாம் அங்கு போனால் தெரியவில்லை. அந்த அளவுக்கு நெருக்கடி இருக்கிறது. ஆகவே குறைந்தபட்சம் மாவட்டத் தலைநகர்களிலாவது குறிப்பாக காயிதேமில்லத் மாவட்டத்தில் கலெக்டர் அலுவலகம் கடந்த 5 ஆண்டுகளாக ஒரு சின்ன ரைஸ் மில்லில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக்காட்டு எல்லாம் வேண்டாம்; வினாவாகக் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : உடனடியாக அம்மாதிரி நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்படுவது விரைவிலே முடிக்கப்பட வேண்டும் என்று அரசு அவர்களுக்குக் கூறி இருக்கிறது.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள் காலை 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்துவிட்டு, வெளியிலே சென்று காபி, டீ பருக வேண்டுமென்ற முறையில் வெளியே செல்வதால் அலுவலக வேலைகள் தேக்க நிலையில் கிடக்கின்ற காரணத்தினால் தலைமைச் செயலக அலுவலகத்திற்குள்ளேயே காபி, டீ கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகள் செய்யப்படுமா? அதனால் வேலைகள் பாதிக்கப்படாமல் நடைபெறும் என்பதை முதல்வர் அவர்கள் கவனிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலை 10 மணிக்கு அவர்கள் வந்துவிட்டதாகச் சொல்கிறார். அதையே பரிசீலிக்க வேண்டும்.

9-10 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தலைமைச் செயலகத்திற்கு என்று தனியாக ஒரு புதிய கட்டிடம் திருச்சியிலோ அல்லது ஈரோட்டிலோ அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். ஆக, நாற்பதாண்டுக் காலம் நெருங்கிய நண்பர் என்று சொல்லுகின்ற நம்முடைய கலைஞர் முதல்வரவர்கள், அவர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில், இப்பொழுது அமைச்சர்களுடைய அறைகளிலெல்லாம் ஏ.சி. வைக்கப்பட்டு குளு குளு என்று இருக்கின்றன. ஆனால் இங்கே இருக்கும் பொழுது அந்த வசதி இல்லை. ஆகவே, எல்லோருடைய ஒட்டுமொத்த நன்மையையும் கருதி, திருச்சியிலோ அல்லது ஈரோட்டிலோ தனியாக தலைமைச் செயலகத்திற்கும், சட்டமன்ற அலுவலகத்திற்கும் என்று கட்டிடம் கட்டுவதற்கான முழு முயற்சியிலே ஈடுபடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கேயே ஏ.சி. வேண்டும் என்று உறுப்பினர் சொல்கிறார். திருச்சியும், ஈரோடும் இதைவிட அதிக கோடைப் பிரதேசங்கள்.

மேல்நிலைப்பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

*1719 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—:

(அ) தொலைக்காட்சி மூலம் கல்வி நிகழ்ச்சிகளைக் காட்ட மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?